H. Baker, 1835-1910

Hesperus (Elim)
L.M.



பாமாலை 528 மகா இக்கட்டாம் ஆபத்து

1 மகா இக்கட்டாம் ஆபத்து
உண்டாகி , எங்கள் மனது
ஓர் யோசனையும் இன்றியே
கலங்கி வாடுகின்றதே.

2 கர்த்தாவே, மனத் தாழ்மையாய்
உம் பாதம் சேர்ந்து ஏகமாய்
அடி பணிந்து கெஞ்சுதல்
அடியாருக்கு ஆறுதல்

3 நொறுக்கப்பட்ட நெஞ்சோடே
வந்தோம்; இரங்கும், கர்த்தரே;
ஆ ! கோபமாய் இராதேயும்,
மன்னிப்பை ஈந்து தற்காரும்.

4 இக்கட்டில் இயேசு நாமத்தில்
மன்றாடினோரைத் தயவாய்
ரட்சிப்போம் என்று தேவரீர்
நல்வாக்குத் தத்தம் செய்திட்டேர்

5 ஆ ! எங்கள் மீறுதல்களைப்
பாராமல் , இயேசு கிறிஸ்துவைப்
பார்த்தெங்கள் வாதை யாவையும்
அன்பாக நீக்கியருளும்.